# ஜாமக்காரன்

# JAMAKKARAN

VOLUME - 1    Reg NO.TNBIL/2016/70171    ISSUE - 4

APRIL 2017 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/=    FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

ஜாமக்காரன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

**உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் இந்த மாதமும் ஜாமக்காரன் வாயிலாக உங்களை சந்திக்க முடிந்ததில் நம் தெய்வத்தை துதிக்கிறேன்.

நம் இந்தியா பல பிரச்சனைகளுக்குள் கடந்துபோய் கொண்டிருக்கிறது. உத்திரபிரதேச மாநிலத்தில் நடந்த தேர்தல் முடிவும், அங்கு **முதல்வராக** தேர்ந்தெடுக்கப்பட்ட நபரும் அவர் செயலும் இந்திய மக்களையே பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. அதன் விவரத்தை உள்ளே தொடர்ந்து நீங்கள் வாசிக்கலாம்.

■ **தமிழ்நாட்டின்** நிலை மிக மோசமான நிலையில் உள்ளது. அரசாங்க செயல்பாடு **ஸ்தம்பித்து** உள்ளது. நாட்டின் வரிப்பணத்தை பல்வேறு முறைகளில் பல கோடிகளை கொள்ளையடித்தவர் **குற்றவாளி** என்று பல **நீதிபதிகளால்** பல நீதிமன்றங்களில் கடந்த 21 வருடங்களாக உறுதிசெய்யப்பட்டு உச்சநீதி மன்றத்தால் (சுப்ரீம் கோர்ட்) **இரண்டுமுறை** உறுதி செய்யப்பட்டு குற்றவாளியான முன்னாள் முதல்வர்.**ஜெயலலிதா** அவர்களும், ஜெயலலிதா அவர்களின் வீட்டு **வேலைக் காரியாக** செயல்பட்ட **சசிகலா** என்பவரும் தமிழ்நாட்டை எத்தனையாய் சீர்குலைத்து இந்தியாவிற்கே பெரும் அவமானத்தை உண்டாக்கிவிட்டனர். இவர்களில் செல்வி **ஜெயலலிதா** மரித்துபோனார். ஆட்சி பீடத்தில்உள்ள ஜெயலலிதாவின் கட்சி இரண்டாக உடைந்து இப்போது **இரண்டு கோஷ்டிகளாக** போராடிக்கொண்டிருக்கின்றனர். இதன் விளைவாக அஇஅதிமுக கட்சி பெயரும் கட்சி சின்னமான இரட்டை இலையும் முடக்கப்பட்டுவிட்டது. **இரண்டு கோஷ்டிகளும்** ஜெயலலிதா கல்லறையில் சாஷ்டாங்கமாக விழுந்து **ஜெயலலிதா ஆவி** தங்களைத்தான் ஆட்சி செய்ய சொல்கிறது என்று கூறிக்கொள்கிறார்கள்.

# ஏப்ரல் 2017

உச்ச நீதிமன்றத்தால் 100 கோடி அபராதம் விதிக்கப்பட்ட அந்த குற்றவாளியான ஜெயலலிதாவின் ஆவி எங்களை வழிநடத்துகிறது என்று கூச்சமில்லாமல் வெட்கமில்லாமல் கூறும் இந்த **பகுத்தறிவாளர்களும்**, பட்டதாரிகளுமான இவர்கள் தாங்கள் தமிழ்நாட்டை தொடர்ந்து ஆள **நீதிமன்றங்களின் படிகளில்** ஏறி இறங்கி கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொள்ளை கூட்டத்தை ஆதரிக்கவும் ஒரு பெரிய கூட்டம் தமிழ்நாட்டில் உண்டு என்பதுதான் தலைக்குனிவை உண்டாக்கும் விஷயமாகும்.

## சசிகலா- CSI பிஷப்மார்கள் சந்திப்பு:

பல கோடிகள்கொள்ளையடித்த கொள்ளை கூட்டத்தின் தலைவியாக கருதப்படும் சசிகலா இப்போது ஜெயிலில் இருக்கிறார். இவர் எந்த ஒரு பதவியிலும் இல்லாத காலத்தில் நம் CSI கிறிஸ்தவ சபைகளின் **பிஷப்மார்கள்** இரண்டு பிரிவாக சசிகலா அவர்களின் இருப்பிடத்துக்கு நேரில் சென்று அவரை **வணங்கி** ஆசிப்பெற்று வந்தோம் என்று பெருமையாக கூறிக்கொண்ட செய்திகளை தினசரி செய்திதாளில் கண்டோம். இந்த நிலையில் நம் CSI **சபைகளின் பிஷப்மார்களின்** ஆவிக்குறிய நிலைபாடு என்னவென்று தெளிவாக அறிய முடிகிறதல்லவா. **சசிகலாவின்** உதவி CSI பிஷப்மாருக்கு எந்த வகையில் தேவை? இவர்கள் சந்திப்பில் உள் நோக்கம் ஏதாவது உண்டா? இவர்களுக்குள் **பணபுழக்கம்** உள்ள வியாபாரம் ஏதாவது உண்டா?



இனியும் இந்த பிஷப்மார்கள் சசிகலாவை சந்திக்க பெங்களூர் ஜெயிலுக்குக்கூட கூட்டமாக சென்று அவர் ஆசி பெற முயற்சிக்கமாட்டார்கள் என்று கூறமுடியாது.

தமிழ்நாட்டு மக்களும்,அரசியல்வாதிகளும் செய்த அதே தவறை நம் CSI சபை தலைவர்களும் செய்யலாமா?. ஆட்சி அதிகாரத்தில் உள்ள **பிரதமர்,முதல்வர்** ஆகியவர்களை CSI பிஷப்மார்கள் சந்திப்பதில் அர்த்தம் உண்டு. ஆளுகிறவர்களுக்காக ஜெபிக்கவும் நம் வேதம் போதிக்கிறது. 1 தீமோ 2:1-4

**மேய்ப்பன் எவ்வழியோ ஆடுகளும் அவ்வழி** இந்த பழமொழி உண்மையாகி விடுமோ. பிஷப்மார்களின் இந்த சந்திப்பின் மூலம் CSI சபை மக்களுக்கு பிஷப்மார்கள் அளிக்கும் செய்தி என்ன? சிஎஸ்ஐ சபைகளுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?

CSI **மாடரேட்டர்** இவைகளை குறித்து பிஷப்மார்களோடு கேள்வி கேட்கமாட்டாரா? நான் இப்படி **எழுதுவதால் பிஷப்மார்களை நான் அவமானப்படுத்து கிறேனா?** கர்த்தருடைய பார்வையில் இவர்களின் இந்த செயல் சரியானதாக இருக்குமா?.

CSI பிஷப்மார் (ஒரு சிலரை தவிர) அத்தனைபேரும் **சசிகலாவை** சந்தித்து ஆசிப்பெற்ற சில மணி நேரத்துக்குள் சசிகலா ஜெயிலுக்குள் அனுப்பப்பட்டாரே?. பிஷப்மார் சந்திப்பு அந்த அம்மையாரை ஜெயிலுக்கு அனுப்பும் ஆசீர்வாதமாக அமைந்துவிட்டதே?.

## கள்ளத்தீர்க்கதரிசிகளின் சந்திப்பு:

■ பிஷப்மார்கள் இப்படியென்றால் பிரசித்திபெற்றதாக,வரம்பெற்றவர்கள் என்று கூறிக்கொள்ளும் ஜெபத்தில் பெயர்களை அழைக்கும் ஊழியர் சகோ.**DGS.தினகரன்,** இந்துமத தலைவர் **சங்கராச்சாரி** அவர்களை சந்தித்து **வெள்ளியினால்** செய்யப்பட்ட பூஜை பொருட்களை அவருக்கு கொடுத்து தன்மகன் **பால் தினகரனுடன்** சங்காரசாரியின் ஆசிபெற்றது பிஷப்மாரின் செயலைவிட பயங்கரமானதும் **சாட்சி கெட்டதுமான செயல் அல்லவா?.**



■ 2017 பிப்ரவரி மாதம் TVயில் **தம்பி பால்தினகரன்** அவர்கள் கர்த்தர் என்னிடம் BJP தலைவரும் பிரதமருமான **திரு. மோடி** அவர்களை சந்திக்கும்படி கூறியதாக கூறி திரு.**மோடி** அவர்களுடன் அமர்ந்து ஒரு **போட்டோ எடுத்துக்கொண்டு** அதை TVயிலும் காண்பித்தார்கள். ஆங்கில பத்திரிகையிலும் அந்த புகைப்படம் வந்தது.

தம்பி பால் தினகரன் திரு.மோடி அவர்களிடம் இயேசுவைப்பற்றி பேசியிருப்பார் என்று நினைக்கிறீர்களா? என்று பலர் என்னிடம் கேள்வி கேட்டார்கள். இந்து மத RSS இயக்கத்தில் உள்ள திரு. மோடி அவர்களிடம் இயேசு கிறிஸ்துவைப்பற்றி இவர் பேசி இருக்கமுடியுமா? யோசித்து பாருங்கள்.

ஏன் மக்கள் என்னிடம் இப்படி கேட்டார்கள்?. காரணம் அவர் தகப்பனார் சங்கராச்சாரியாரை சந்தித்து **பைபிளோ, துண்டுபிரதியோ** கொடுகாக்காமல் பூஜை பொருள்களை ஞாபக பரிசாக கொடுத்தாரே அதையே மகன் பின்பற்றினார்.

■ இயேசு பால்தினகரனை எதற்கு திரு.மோடி அவர்களை **சந்திக்க சொன்னார்** என்பதை கடைசி வரை TV ல் பால்தினகரன் கூறவில்லையே, காரணம் MBA படித்த ஒரு **கல்வி ஸ்தாபன** வியாபாரியான டாக்டர் பால்தினகரன் அவர்கள் பிரதமரிடம் **வியாபார சம்பந்தமான** காரியங்களுக்கு அனுமதி விஷயமாக பேசுவதற்காக அல்லாமல் வேறு எதற்காக அந்த சந்திப்பு நடந்திருக்கும்?.

■ கோயமுத்தூரில் **சிவன் சிலை** அமைத்த **ஈஷா** அமைப்பாளர் தன் பேட்டியில் **காருண்யா** கல்லூரி கட்டப்பட்ட நிலம் வனத்துறைக்கு சொந்தமான அரசு நிலம். அதைக்குறித்து வழக்கு நிலுவையில் உண்டு. அப்படியிருக்க நான் **சிலை** எழுப்பிய நிலத்தை குறித்து ஏன் கேட்கிறீர்கள் என்றாரே? இப்படி பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியதாக செய்தி வந்ததே . !

■ தமிழ்நாட்டின் **சபைகளின் நிலைமையும்** படுபாதளத்தை நோக்கி போய்கொண்டிருக்கிறது.

■ இயேசுவை தினம் சந்தித்து பேசுவதாக கூறும் ஊழியர்கள் பெருகிவிட்டனர். இப்படி கூறும் ஊழியரின் நிலையும் வியாபார நோக்கில்தான் போய்கொண்டிருக்கிறது. பால்தினகரன் தான் கட்டப்போகும் பெரிய கட்டிடத்திற்கு காணிக்கை வாங்கும் விளம்பரத்தில் ஒரு செங்கல் **300 ரூபாய்க்கு வாங்கும்** நபர்கள் தேவை. ஒரு **செங்கல் 1000 ரூபாய்க்கு** வாங்கும் நபர்கள் இத்தனை பேர் வேண்டும் என்ற விளம்பரம் மிக பிரபலமாக காணப்பட்டதே!

■ கோயமுத்தூர் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர் அந்நியபாஷையில் செங்கலில் ஆவியானவர் இறங்கிருப்பதாக கூறினார். ஒரு செங்கலை வாங்கி தலையனை அடியில் வைத்து படுத்தால் தூதர்கள் வானத்திலிருந்து இறங்குவதை காண்பீர்கள். அந்த செங்கல் உங்களுக்கு ஆசீர்வாதத்தை கொடுக்கும் என்று அறிவித்தபோது அந்த சபையின் படித்த முட்டாள்கள் 10000 ரூபாய் கொடுத்து ஒரு செங்கல் வாங்கினார்களே, சபையில் செங்கல் வியாபாரம் பரிசுத்த ஆவியானவர் பெயரில் அமோகமாக நடைபெறவில்லையா? ஒரு வழியாக பெந்தேகோஸ்தே சபையினரே அச்செயலை கண்டித்ததால் அந்த பாஸ்டர் சபையில் செங்கல் விற்பதை நிறுத்தினார்.

■ தமிழ்நாட்டின் அரசியல்வாதிகளின் நிலை சொல்லவே வேண்டாம். நாட்டின் நிலை இப்படி இருக்கும்போது **தமிழ்நாடெங்கும் தண்ணீர் பஞ்சம்** கடுமையாக உள்ளது. பெண்கள் காலிகுடங்களை எடுத்து தண்ணீர்தேடிபோகும் நிலை பரிதாபம். நல்ல செழிப்பான மாவட்டம் என்று வர்ணிக்கப்பட்ட **கன்னியாகுமரி** மாவட்டத்தில்கூட வரலாறு காணாத அளவு தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மேலே எழுதியதெல்லாம் செய்திகள் ஆகும். வாசகர்கள் ஜெபிப்பதற்காக எழுதப்பட்டது. ஜெபிப்போம்! வேறு என்ன செய்ய!.

■ **தூத்துக்குடி நாசரேத்** திருமண்டலத்துக்கு நீண்டகாலமாக **பிஷப்** தேர்ந்தெடுக்கப்படாமல் வேண்டுமென்றே **பிஷப்** தேர்தலை தள்ளி வைப்பதுபோல் கூறப்படுகிறது. ஆனால் இப்போது ஒரு வழியாக தேர்தல்அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற 6 வருடங்கள் உள்ள ஆயரை பிஷப்பாக தேர்ந்தெடுக்க **திருமண்டல பொருப்பாளர்கள்** முயற்சி செய்வார்களாக. புதிய மாடரேட்டருக்காக ஜெபிக்கிறேன். கடந்த கால CSI மாடரேட்டர்களாக தொடர்ந்து பதவி வகித்தவர்கள் பிஷப் பதவிக்கு தங்கள் சிபாரிசுக்கு கோடிகள் வாங்கினார்கள்.

இப்போது CSI மாடரேட்டராக தெரிந்தெடுக்கப்பட்டவர் லஞ்சம் வாங்கமாட்டார் என்று சிலர் யூகிக்கிறார்கள். ஆனால் சினாட்டில் உள்ள பொருப்பாளர்களில் **ஒருவரை** சினாட் மெம்பர்கள் பணவிஷயத்தில் அவர் பலவீனமானவர். ஆகவே அவர் மூலமாக பிஷப் பதவிக்கு பணம் வாங்கப்படலாம் என்று கூறுவது உண்மையாக இருக்கக்கூடாது என்று ஜெபிப்போம்.

கர்த்தரின் பணியில்

**டாக்டர் புஷ்பராஜ்**

# கேள்வி - பதில்

**கேள்வி :** இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் மாம்ச சரீரத்தில் வரமாட்டார். நம்முடைய அறிவுக் கண்களால் மட்டுமே அவரை பார்க்கமுடியும் என சில தகவல்களை வாசித்தேன். இது சரியான தகவல் என்றால் வெளி. 1:7ல் உள்ள "அவரை **குத்தினவர்களும் அவரைக்** காண்பார்கள்" என்ற தீர்க்கதரிசின வார்த்தைகள் எப்படி நிறைவேறும்? என்பதைக் குறித்து விளக்கம் தரமுடியுமா?

**பதில் : 1. "மாம்சத்தில் வரமாட்டார்"**

1 பேது 3:18ன்படி "ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார், அவர் **மாம்சத்திலே** கொலையுண்டு. **ஆவியிலே** உயிர்ப்பிக்கப்பட்டார்" **மாம்சத்தில்** மரித்த இயேசுகிறிஸ்து **ஆவியில்** உயிர்ப்பிக்கப்பட்டார். கிறிஸ்து **மாம்சத்தில்** அல்ல **ஆவியில்** உயிர்ப்பிக்கப்பட்டார் என இவ்வேத வசனம் தெளிவாகக்காட்டுகிறது.

2. யோ 6:5ன்படி நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் **என் மாம்சமே** என்றார்" கிறிஸ்துவின் **சரீரம்** நமது நித்திய ஜீவனுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டது. எனவே **நம்முடைய பாவங்களுக்காக** சிலுவையில் ஒப்புக்கொடுத்த **சரீரத்தை இயேசு திரும்பபெறமாட்டார்** என்பது நிச்சயம்.

3. "ஏனென்றால் எந்த மிருகங்களுடைய **இரத்தம்** பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ. அந்த மிருகங்களின் **உடல்கள்** பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்" எபி. 13:11

"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல. தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை இயேசு நமக்கு உண்டுபண்ணினார்" எபி. 9:12. நமக்கு மீட்பை உண்டுபண்ணின **அவருடைய இரத்தத்தை** அவர் மறுபடியும் தன் **சரீரத்தில் பெறுவது** என்பது கொடுத்ததை **திரும்ப பெறுவதுபோல** இருக்குமல்லவா?

4. "சகோதரரே நான் சொல்லுகிறதென்னவெனில். **மாம்சமும் இரத்தமும்** தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை"1 கொரி. 15:50

யோ. 5:26ன்படி அழியாமையுள்ளவராக முதல்முதலாக **ஆவியில்** உயிர்த்தெழுப்பப்பட்ட கிறிஸ்து **அழியும் தன்மையுள்ள சரீரத்தை திரும்ப பெறவேண்டிய** அவசியமில்லை. எனவே ஆவியின் **சிருஷ்டியாக** உயிர்த்தெழுப்பப்பட்டு ஆவிக்குரிய மேன்மையைப் பெற்ற அவரை **ஆவியினாலேயே** விசுவாசித்தாய். காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" யோ. 20:29

## 2. "அறிவுக்கண்களால் மட்டுமே காணமுடியும்."

**அறிவுக்கண்கள்** என்பது அறிந்துகொள்ளும் அல்லது **புரிந்துகொள்ளும்** ஆற்றலுடைய கண்களைஅர்த்தப்படுத்துகிறது. மற்றொன்று தேவனால் **கண்கள் திறக்கப்பட்டு** காணக்கூடிய தரிசனங்கள் காணக்கூடிய கண்கள் என்றும் அர்த்தப்படுத்தலாம். மத். 13:13-17ன்படி நம்முடைய **சரீரத்தின் கண்கள் வேறு,** விசுவாச **கண்கள்** அதாவது **அறிவுக்கண்கள்** வேறு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

"**குமாரனைக் கண்டு** அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும். என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்". யோ. 6:40 இவ்வேத வசனத்தின்படி **கண்டு என்பது** அவரை நேரில் காண்பது அல்ல **அவரை அறிந்துகொள்வதையே** அர்த்தப்படுத்துகிறது. எனவே **குத்தினவர்கள் அவரைக்காண்பார்கள்** என்பது **யூதகோத்திரத்தார்** அவரை தங்களது மீட்பராக **இயேசுவை அறிந்துகொள்வார்கள்** என்பதாக அர்த்தப்படுத்தலாம்.

"அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்து பார்த்து தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் **கண்டு,** அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் **காண்கிறேன்** என்றான்". அப். 7:55,56

"அப்பொழுது எலிசா விண்ணப்பம்பண்ணி. கர்த்தாவே இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் **கண்களைத் திறந்தார்.** இதோ. எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரத்தங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை **அவன் கண்டான்**". 2 இரா 6:17

மேற்கண்ட இரண்டு வேத வசனங்களின்படி தேவன் நமது **கண்களை திறந்தருளும் போது** இதைபோன்ற தேவதரிசனங்களை தேவன்அனுமதித்தால் இப்போது நமக்கு அது தேவை என்று கர்த்தர் கருதினால் நாம் **காணமுடியும்** என்பதும் தெளிவாகிறது. எனவே கிறிஸ்துவை நாம் தரிசிக்க அவர் தன் **மாம்ச சரீரத்தில்** தன்னை காண்பிக்க விஷேச மாம்ச உடல் எடுக்கவேண்டியதில்லை நம்முடையகண்களை தேவன் **திறந்தருளினாலே** போதும் . எனவே இரண்டாம் வருகையின்போது இயேசுகிறிஸ்துவை அவர் **இருக்கும் வண்ணமாகவே** தரிசிக்க நமக்கு வாய்ப்பு அளிக்கப்படும். (1 யோ. 3:2, மத். 5:8)

எனவே இயேசுகிறிஸ்து **மாம்சத்தில்** வெளிப்பட்டால்தான் நாம் காணமுடியும் என்றோ அல்லது அவர் **ஆவியாயிருப்பதால்** அவரை **காணவே முடியாது** என்றோ நாம் நினைக்கவேண்டியதில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் உயிர்த்தெழுப்பப்பட்ட கறிஸ்து தமது சீஷர்களுக்கு **தரிசனங்கள் மூலம்** தம்மை வெளிப்படுத்தியதை வேதத்தில் நாம் காண்கிறோம்."

அவர் பாடுபாடுபட்டபின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் **தரிசனமாகி,** தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் **தம்மை உயிரேடிருக்கிறவராகக்** காண்பித்தார்" அப். 1:3 (1 கொரி. 15:5-8, யோ. 201-18 லூக் 24:13-31)

**3. வானத்தின்மேல் மேகங்களுடனே வருகிறார்.**

**மேகம்** என்பது பொதுவாக தேவனுடைய **பிரசன்னத்தை** அடையாளப்படுத்துவதாக உள்ளது. அதை தேவனுடைய **நிழல்** என்பதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

"கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும். கர்த்தராகிய நீர் முகமுகமாய்த் தரிசனமாகிறதையும். **உம்முடையமேகம்** இவர்கள்மேல் நிற்கிறதையும் பகலில் மேகத்தூணிலும். இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள். இந்த தேசத்தின் குடிகளும் அதை சொல்லுவார்கள்". எண்.14:14 (யாத். 24:16, யாத் 40:34)

கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தினால் நாம் அவரைக்கண்டு மடிந்துபோகாதபடிக்கு அல்லது நாம் **பயப்படாதபடிக்கு** நம்மை காக்கவே இயேசு கிறிஸ்து **மேகங்களுடன்** வருவதாக அர்த்தப்படுத்திக்கொள்ளலாம். ஒருவேளை கர்த்தரின் மகிமையின் பிரகாசம் விவரிக்ககூடாததாக இருக்கலாம். கர்த்தரிடம் அன்று பேசியவர்களின் முகத்தின் பிரதிபலிப்பை பார்த்தவர் தாங்கமுடியாமல் போனதை கீழே உள்ள வசனத்தில் அறியலாம்.

"**மோசேயை** மலையிலிருந்து இறங்கி வந்தபின் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் **மோசேயை** பார்க்கும்போது **அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு.** அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள்" (யாத் 34:29,30)

"இயேசு அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் **சூரியனைப்**போல பிரகாசித்து அவர் வஸ்திரம், **வெளிச்சத்தைப்போல** வெண்மையாயிற்று. அப்போது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். அப்போது பேதுரு இயேசுவை நோக்கி, ஆண்டவரே இங்கே **உமக்கு** ஒரு கூடாரமும், **மோசேக்கு** ஒரு கூடாரமும், **எலியாவுக்கு** ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப்போடுவோம் எனறான். அவன் பேசுகையில், இதோ ஒளியுள்ள **ஒரு மேகம்** அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று. சீஷர்கள் அதைக்கேட்டு **முகங்குப்புற விழுந்து.** மிகவும் **பயந்தார்கள"** மத். 17:26)

**சூரியனைப்போல** பிரகாசமாயிருக்கும் நம்முடைய ஆண்டவர் நீதியின் சூரியனாக வானில் வெளிப்படும்போது, அது **மின்னல்** கிழக்கிலிருந்து மேற்குவரைக்கும் பிரகாசிப்பதுபோல அவரது வருகை இருக்கும் என்ற வேத வசனத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. நீதியின் சூரியனான அவர் மேகங்களுடன் **வானத்தில்** வருவதாகத்தான் வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றவர்கள் கூறுவதுபோல பூமியில் **ஏதாவது ஒருநாட்டில்** அல்லது ஒரு இடத்தில் காணப்படுவார் என்று யூகிப்பது சிலர் **பூமியின் கோத்திரத்தார் எல்லாரும்** அவரைக்கண்டு புலம்புவார்கள் என்பதற்கு நேர் எதிரிடையாக உள்ளது. எனவேதான் இயேசு கிறிஸ்து பூமியில் இருந்தபோது பின்வரும் எச்சரிப்பு செய்தி ஒன்றையும் நமக்கு கொடுத்தார்.

"ஆகையால் அதோ **இயேசு வனாந்திரத்தில்** இருக்கிறார் என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள். இதோ அவர் **அறைவீட்டிற்குள்** இருக்கிறார் என்று சொல்வார்களானால் **நம்பாதிருங்கள்.** மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். மத் 24:26.27. "அப்போது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" மத் 24:30 (வெளி 1:7, அப் 1:9-11)

இயேசுவின் **இரண்டாம் வருகையைகு**றித்த எல்லா வேதபதிவுகளும் அவர் **வானத்தில் வருவார்** என்றே உள்ளது. பூமியில் ஏதாவது ஒரு இடத்தில்அல்ல என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். மேலும் சபை எடுத்துக்கொள்ளப்படுதலிலும் அவரை மேகங்களில் சந்திக்கவும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோகவும் மேகங்கள்மேல் அவர்களோடேகூட நாம்ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" 1 தெச. 4:16

## 4. நியாயத்தீர்ப்புக் கொடுக்க வருகிறார்

"மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன், அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே **மரித்தோர்** தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக **நியாயத்தீர்ப்படைந்தார்கள்"** வெளி 20:12

மேலே வாசித்த வேத பகுதி இது தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்புப்பற்றிய **தீர்க்கதரிசன வசனமாகும்.** இந்த சமயத்தில் மரித்தவர்கள் அனைவரும் உயிர்த்தெழுப்பப்பட்டு அவர்களுடைய செய்கைகளுக்கு தக்கதாக நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோ 5:28,29 1 கொரி 15:22) இறுதி நியாயத்தீப்பைக் குறித்து தெளிவான பதிவுகள் மத் 25:31-46ல் உள்ளது. தயவுசெய்து படித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து தனது வலது பக்கத்தில் நிற்பவர்களையும், இடது பக்கத்தில் நிற்பவர்களையும் பார்த்து தீர்ப்பு செய்கிறார். அந்த சூழ்நிலையில் **ஜனங்களும் அவரோடு பேசமுடிகிறது என்பதை கவனியுங்கள்.** இந்த கருத்தை உறுதி செய்யும் விதமாக மத். 7:22,23ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். **"அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம்** உரைத்தோம் அல்லவா? **உமது நாமத்தினாலே பிசாசுகளைத்** துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே **அநேக அற்புதங்களைச்** செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைகாரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்".

எனவே இறுதி நியாயத்தீர்ப்பு நாளில், நிச்சயமாகவே நம்முடைய ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவை **நியாயதிபதியாகத்தான்** காண்போம்.

## 5. கிறிஸ்துவை அடையாளம் காணுதல்

இயேசு உயிற்த்தெழுந்தபின் அப்போஸ்தலர்களும், சீஷர்களும். இயேசுகிறிஸ்துவை நேரில் பார்த்தபோது, ஏற்கனவே அவர்கள் அவரது **குரலைக் கேட்டவர்கள்** ஆனபடியால் அவர்களால் உயிர்தெழுந்த இயேசுகிறிஸ்துவை **அடையாளம்** கண்டுகொள்ள முடிந்தது. ஆனால் நாம் அவரை **பார்க்கவும் இல்லை,** அவரது குரலைக் **கேட்கவும் இல்லையே** நாம் எப்படி இயேசுவை அடையாளம் கண்டுகொள்ளமுடியும்? என நம்மனதில் கேள்வி எழலாம். இதற்கு பைபிளில் ஆதாரம் உள்ளது. தயவுசெய்து. மத் 17:1-9ல் உள்ள பதிவுகளை வாசித்துப் பாருங்கள்.

1. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த அப்போஸ்தலர்களான பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபு என்பவர்கள், முதற்பிதாக்களாகிய **மோசே** மற்றும் **எலியாவைப்** பார்த்திருக்க முடியாது. அவர்களது குரலையும் கேட்டிருக்க முடியாது. இருந்தாலும் இயேசுகிறிஸ்துவுடன் அன்று மறுரூப மலையில் மோசேயும், எலியாவும் பேசியபோது எப்படி அவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது?

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். (மாற். 9:23, 10:27) இதுதான் அதற்கான பதில்

2. மத் 16:13-16ன்படி மனுஷகுமாரனாகிய இயேசுவை யார்? என்று ஜனங்கள் புரிந்துகொள்ளாத போது பேதுரு மட்டும் அவரை **ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என தெளிவாக புரிந்துகொண்டு சரியான பதிலை எப்படி சொல்ல முடிந்தது? அதற்கான பதிலை இயேசுவே இவ்விதமாக தருகிறார். "இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. **பரலோகத்திலிருக்கிற என்பிதா இதைஉனக்கு வெளிப் படுத்தினார்**". மத் 16:17 என்றான்.

3. அப் 2:5-11ன்படி பெந்தேகொஸ்தே நாளில் எருசலேம் நகரில் ஏறக்குறைய **16 பாஷைகள்** பேசக்கூடிய ஜனங்கள் மத்தியில் கலிலேயர்களான அப்போஸ்தலர்கள் நற்செய்தியை அறிவித்தபோது கூடியிருந்த அனைவரும் எப்படி அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளில் கேட்கமுடிந்தது?

இதற்கான பதிலை அப். 2:4ல் காணலாம் "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின் **வரத்தின்படியே வெவ்வேறு** பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்".

அங்கு நின்றவர்கள் பேசியதை **விளங்கிக்கொண்டார்கள்.** அப்படியே **கொரிந்து சபையில்** அன்றைய நாளில் **பொது பாஷையாக** அறியப்பட்ட **கிரேக்க பாஷையில்** அப்போஸ்தலர் பேசியபோது மொழிபெயர்ப்பு இல்லாமல் 16 பாஷைக்காரர்களும் பிரசங்கத்தை விளங்கிக்கொள்ள **கிரேக்க பாஷை** போதுமானதாக இருந்தது. அர்த்தம் இல்லாமல் உளரும் பாஷையை வேதம் அனுமதிப்பதில்லை - கர்த்தரும் அதை அங்கீகரிக்கவில்லை.

4. ஆடுகள் மேய்ப்பனையும் அவருடைய குரலையும் அடையாளம் கண்டுகொள்வதுபோல நாம் இயேசுகிறிஸ்துவை அடையாளம் கண்டுகொள்வது நிச்சயமே. "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது". யோ. 10:27

எனவே இறுதி நியாயத்தீர்ப்பு நாளில் நம்முடைய ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவை நிச்சயமாக காண்போம் என்ற விசுவாசத்தோடு, அந்த குறிப்பிட்ட சமயத்தில் இயேசு கூறியதுபோல அவரது **வலதுபக்கத்தில் நிற்கிறவர்களாக காணப்படவும்** தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவ ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும். தெளிந்த புத்தி உள்ளவர்களாக நடந்துகொள்ள தொடர்ந்து முயற்சி செய்வோமாக.

"இரத்தத்தினாலே நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறி வரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து நீங்கள் தம்முடைய சித்தித்தின்படியே செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக: அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்" எபி. 13:20,21.

vvvvvvvvvvvvvvvvvvvv

# இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு வரப்போகும் புதிய ஆபத்துக்கள்

இந்தியாவில் சமீபத்தில் நடந்த இடைதேர்தலில் இந்துமத தீவிரவாத அமைப்புகளான RSS, பஜ்ரங்தள் இவர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள BJP கட்சி. இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான **உத்திரபிரதேசத்தில்**(UP) மிக அதிக அருதி பெரும்பான்மையுடன் தேர்தலில் புதிய மிருக பெலத்தோடு ஜெயித்து **ஆட்சியை பிடித்துவிட்டது.** இவர்கள் எதை செய்தாலும் எதிர்த்துகேட்க எதிர்கட்சிகள் எண்ணிக்கை அதிகம் இல்லாத அளவு குறிப்பாக பிரதான எதிர்கட்சியான **காங்கிரஸ்** ஒரே ஒரு இடத்தில் மட்டும் ஜெயித்துள்ளது. இது பெரும் ஆபத்தான சூழ்நிலையாகும்.



BJP ஜெயித்தது மட்டும் பெரிய பிரச்சனையல்ல ஆனால் அந்த UP மாநிலத்தின் **முதல்வராக** தெரிந்தெடுக்கப்பட்ட **நபர்** மிக பயங்கரமான இந்துமத தீவரவாதியாகும். மிக சிறு வயதில் (44 வயது) UP முதல்வராகியிருக்கிறார் என்ற பெருமையும் இவருக்குண்டு.

**இவர் திருமணமாகாமல் சாமியாராக மாறியவர். அதோடுமல்ல இவர் கோரக்நாத் என்ற இந்து கோவிலின் பூசாரியுமாவார். தாக்கூர்** என்ற இனத்தை சேர்ந்த இவர் ஆரம்ப காலத்திலேயே இந்து **யுவ வாஹினி** என்ற இயக்கத்தை உருவாக்கி **இந்துத்துவ கொள்கையை** இளைஞர் மத்தியில் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். இஸ்லாமியர், **கிறிஸ்தவர்களுக்கு** எதிராக மக்களை தூண்டிவிடும் வண்ணம் பல கருத்துக்களை கூறி BJP கட்சிக்கு பலத்த சங்கடத்தை உண்டுபண்ணினார்.

நான் **சாவதற்குமுன்** UPயில் உள்ள **அயோத்தியில்** எப்படியாவது **ராமர் கோவிலைக் கட்டியே தீருவேன்** என்று சபதமெடுத்தவரான இவர் கையில் இப்போது UP உத்திரபிரதேச மாநிலத்தை ஆளும் முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி இவர் எந்த மாதிரி நடவடிக்கைகளை எடுப்பாரோ என்று மக்கள் கலக்கமடைந்துள்ளனர். ஆட்சி பொறுப்பேற்றவுடன் உபி மாநிலத்தில் **இறைச்சி கடைகள்** யாவும் மூடப்படவேண்டும் என்று முதல் சட்டம் கொண்டு வந்தார்.

இவர் தலைமையில்தான் சில வருடங்களுக்குமுன் 1800 **கிறிஸ்தவர்களை** கட்டாயப்படுத்தி **தலை மொட்டையடித்து** தாய்மதத்துக்கு திரும்புகிறார்கள் என்று பெரிய விளம்பரம் செய்து இந்தியமக்களை கலங்க செய்தார். இதன்மூலம் **மத சுதந்திரத்தின்** பேரில் முதல் இடிவிழுந்தது. இந்தியர் எங்கும் **இந்துத்துவா கொள்கை** கடைபிடிக்கவேண்டும் என்றார். **சூரிய நமஸ்காரம்** செய்ய பிரியம்இல்லாதவர்கள் இந்தியாவை விட்டு போய்விடவேண்டும் என்றார்.

2007ல் இஸ்லாமியர்களின் **மொஹரம்** பண்டிகையில் பெரும் கலவரம் உண்டாக்கி சில கொலைகளும் நடந்தது. கொல்லப்பட்டவர்களில் ஒருவர் இந்து மதத்தைசேர்ந்த வாலிபராகும். **உடனே இவர் பெரும் கலவரம் உண்டாக்கி கோரப்பூர்- கோடான் எக்ஸ்பிரஸ்** ரயிலை

கொளுத்தினார்கள். அது எரிந்து சாம்பலானது அன்று ஒரு நாள் மட்டும் கோரப்பூரில் **சுமார் 7மசூதிகளுக்கும்,இஸ்லாமியர் வீடுகளுக்கும்** வேறு சில ரயில்களுக்கும் தீ வைத்து கொளுத்தி கோரதாண்டவமாடினார்கள்.அதன்பின்தான் **திரு.யோகி** அவர்கள் கைது செய்யப்பட்டார்.

இவர்மீது தீர்ப்பு சொல்லப்படாத வன்முறை கொலை முயற்சி வழக்குகள் ஏராளம் உண்டு. **கிரிமினல்,மிரட்டல்** கேஸ்களும் இவர்மேல் உண்டு. அதோடு இஸ்லாமியர் **சவஅடக்க** இடங்களில் இவர் **அத்துமீறி நுழைந்து கலவரம்** உண்டாக்கியது போன்ற பல வழக்குகள் இப்போதும் **நிலுவையில் இருக்கிறது.** இப்படிப்பட்ட சூழ்நிலையில் திரு.யோகி அவர்கள் உ.பி முதல்வராகி இருக்கிறார். தேர்தலுக்குமுன் **சமாஜ்வாதி கட்சி** உ.பி. மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்த சமயத்திலே தேர்தலுக்கு சில மாதங்களுக்குமுன் உத்திரபிரதேசம் **சித்தாபூர்** என்ற ஊரில் **கிறிஸ்தவ மிஷனரிகளை,மிஷனரியையும்,** அவர் மனைவியையும், மற்றொரு கிறிஸ்தவ மிஷனரி ஆகியோர்களை **முழு நிர்வாணமாக்கினார்கள்.** ஒரு பொட்டுதுணி உடலில் இல்லாமல் குழந்தையின் சட்டையையும் நீக்கி **நிர்வாணமாக்கி** பொதுமக்கள் கூடும் முச்சந்தியில் அவர்களை **உட்காரவும் அனுமதிக்காமல்** அப்படியே அவர்களை நிற்கவைத்து அவர்கள் நிர்வாணத்தை **பொதுமக்களை பார்க்க வைத்த** கொடுமை வேறு எங்காவது நிகழ்ந்ததுண்டா? கீழே உள்ள படத்தை பாருங்கள். **மிஷனரி** மனைவி தன் கணவரின் **நிர்வாணத்தையும்,** தன் **நிர்வாணத்தையும்** மறைக்க தன் குழந்தையையே மறைப்பாக தங்கள் நடுவில் **நிர்வாணத்தை** மறைக்க வைக்க முயற்சிசெய்யும் கொடுமையை ஆப்பிரிக்கா காடுகளில்கூட இல்லை. அந்த காலத்தில் வாழ்ந்த ஆதிவாசிகள் கூட இப்படி மிருகத்தனமாக நடத்தப்படவில்லை.



BJP ஆட்சிக்கு வராததற்கு முன்பே **கிறிஸ்தவ ஊழியம்** செய்தவர்களை இப்படி **நிர்வாணப்படுத்தி** கிராமத்தைவிட்டு வெளியேற்றினார்களே!

இப்போது **மிருக பெலத்தோடு** ஆட்சியை பிடித்திருக்கும் RSS தீவரிவாதியும் BJP கட்சியின் புதிய முதல்வராக பதவி ஏற்றிருக்கும் **திரு யோகி** அவர்கள் தன் சகோதர தீவிரவாத கட்சியான பஜ்ரங்தள், RSS ஆகிய கட்சிகளில் உள்ள ஈவு இறக்கமற்ற **இந்துமத வெறியர்களை கிறிஸ்தவர்களுக்கு** எதிராக நிச்சயம் **அவிழ்த்துவிடுவார்.** குஜராத்தில் கலவரத்தில் மூன்று நாட்கள் **போலீஸ் கைகளை** கட்டிவைத்து சிறுபான்மையினரை கொலை செய்ய இந்துமத தீவிரவாதிகளுக்கு அனுமதித்ததுபோல் **திரு. யோகி** செய்வார் என்று மக்கள் பயப்படுவதில் நியாயம் உண்டே!.

# இஸ்லாமியராலும் கிறிஸ்தவர்களுக்கு ஆபத்து

கீழே காணும் படங்கள் எல்லாம் **இஸ்லாமிய நாடுகளிலும்** பாகிஸ்தானிலும் மற்ற நாடுகளிலும் கிறிஸ்தவர்களின் கழுத்தை அறுத்தும் துப்பாக்கியால் சுட்டும் கொலைவெறியாட்டம் நடத்தினார்கள். இப்போது தினம் வெவ்வேறு இடங்களில் இப்படிப்பட்ட கொடூரங்களை **இஸ்லாமிய மதத்தை** சேர்ந்த பல்வேறு தீவிரவாத அமைப்புகள் உலகெங்கும் இப்படிப்பட்ட கொலைகளை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.







**அந்தி கிறிஸ்துவின் உபத்திரவ காலத்தில்** நடக்கப்போவதை இப்போதே ஒத்திகை பார்ப்பது போல கிறிஸ்தவர்கள் குறிப்பாக **மிஷனரிகள், கிறிஸ்தவ சபைகள் கிறிஸ்தவ ஊழியர்கள்** சித்திரவதை செய்து கொல்லப்படுகின்றனர்.






# கிறிஸ்தவ விசுவாசிகள் சபைகள் செய்ய வேண்டியதென்ன?

இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலைகளில் **கிறிஸ்தவர்கள்** தங்கள் சபை உபதேசங்களை குறித்த வைராக்கியங்களை தூக்கி எரிந்து **கிறிஸ்துவையும்,** அவர் சிலுவையில் பட்டபாடுகளையும் நம் யாவருக்காவும் அவர் சிந்திய **ரத்தத்தைப்பற்றி மட்டும் முன்** வைத்து ஜெபிக்கவேண்டும். **சபை வித்தியாசம்** பாராமல் அனைத்து சபை மக்களும் ஆங்காங்கே ஒரு பொது இடத்தில் ஒன்றுசேர்ந்து இணைந்து ஜெபிப்பது மிகமுக்கியம். குறிப்பாக அந்த கூடுகை உபவாச ஜெப கூடுகையாக இருப்பது மிக முக்கியம். மத் 18:19.

**எஸ்தருக்கு** அறிவிக்கப்பட்டதைபோல் பிரச்சனை வரும்போது மற்றவர்கள் அகப்படும்போது நீ மாத்திரம் **காக்கப்படுவாய்** என்ற நினைத்துகொள்ளாதே!.

எல்லா வேத வசனங்களும் அறிந்த நீ **இப்படிப்பட்ட காலத்தில் ஜெபிக்காமல்** ஜெப ஐக்கியங்களில் பங்குக்கொள்ளாமல் இருந்தால் **மவுனமாயிருந்தால் கர்த்தர் வேறு யாரைக்கொண்டாவது** இந்த ஏற்பாடுகளை செய்வார். (எஸ்தர் 4:13,14) இந்த வசனங்களை விரிவாக்கம் செய்து எழுதினேன்.

நம் நாட்டில் இப்படிப்பட்ட கொடூரங்கள் நடக்காமல் இருக்க கர்த்தர் தன் பிள்ளைகளை ஜெபிக்க வைத்து அதை கர்த்தரே கேட்டு விசுவாசிகளை காப்பாற்றி ஆபத்தை தடுப்பார்.(எசே 22:30) நான் தேசத்தை **அழிக்காதபடி திறப்பின் வாசலில் நிற்கதக்கதாய் ஒரு புருஷனை தேடினேன் ஒருவனையும் காணவில்லை** என்கிறார்.

**எசே. 9:4** தேசத்தில் நடக்கும் சகல அறுவருப்புகள் (All the sins they see around them) நிமித்தம் பெருமூச்சுவிட்டு அழுகிறவர்களின் **நெற்றிகளில் அடையாளம் போடு** என்று கர்த்தர் சொன்னதாக இந்த வசனம் கூறுகின்றது.

**சகரியா 4:6 பெலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல** என் **ஆவியினாலே ஆகும்** என்று கர்த்தர் கூறுகிறார். அதனால்தான் யோவேல் தீர்க்கதரிசி மூலமாக யோவேல் 1:14 பரிசுத்த **உபவாச நாளை நியமியுங்கள்** கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். இதை வாசிக்கும் விசுவாசிகள் யாவரும் நான் எழுதிய இந்த செய்திகளை அற்பமாக எண்ணாமல் சிறு சிறு கூட்டமாக கூடி இந்தியாவில் வர இருக்கும் **ஆபத்தைக்**குறித்து ஜெபியுங்கள். உங்கள் குடும்ப ஜெபத்திலும் தினசரி தவறாமல் ஜெபியுங்கள்.

## யாருக்கு ஆபத்து இல்லை!!.

**மனம் திரும்பாத பெயர் கிறிஸ்தவர்கள் ஆயர்கள், பிஷப்மார்கள், மாடரேட்டர்கள், மனம் திரும்பின அனுபவம்இல்லாத பெந்தேகொஸ்தே சபை மக்கள், பாஸ்டர்கள், மற்ற சபை மக்கள், பொதுவாக இரட்சிப்பின் அனுபவம் இல்லாத கிறிஸ்தவர்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை.** இவர்களை **பிசாசும்** ஒன்றும் செய்யமாட்டான். இவர்கள் நம்ம ஆட்கள் என்ற நிலையில் **பிசாசு** இவர்களுக்கு உதவிகூட செய்யலாம். இப்படிப்பட்ட **பெயர் கிறிஸ்தவர்களுக்குத்தான் ஆபத்தில்லை.** உண்மை கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையோடும், ஜெபத்தோடும் இருப்போம். காலம் மிகவும் நெருங்கிவிட்டது. உண்மை விசுவாசிகள் இதற்காக ஜெபிப்போம்.

vvvvvvvvvvvvvvv

## வெளிநாட்டு வாழும் வாசகர்கள் கவனிக்கவும்:

‘ வெளிநாட்டுக்கு அனுப்பும் ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஸ்டாம்ப் விலை மிக அதிகமானதால் ஒரு ஜாமக்காரனுக்கு 51ரூபாய், 64 ரூபாய் என்று ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருப்பதால் கம்பியூட்டர் வைத்திருப்பவர்கள் உங்கள் ஜாமக்காரனை PDFல் பெற்றுக்கொண்டு அதை டவுன்லோட் செய்து வீட்டில் உள்ள யாவரும் வாசிக்கவும். மற்றவர்களுக்கும் காப்பி எடுத்து உதவவும் வேண்டுகிறேன். ஆகவே எங்கள் **இமெயில்க்கு ஜாமக்காரனை அனுப்பவும்** என்று எங்களுக்கு நீங்கள் எழுதினால் போதும். உங்கள் **இமெயில் ஐடியை** நாங்கள் குறித்துக்கொண்டு ஜாமக்காரனை **அச்சகத்துக்கு அனுப்பும் முன்பே** உங்களுக்கு **PDF வழியாக** பெற்றுக்கொள்ளலாம்.

‘ இதன்மூலம் லட்சக்கணக்கான ரூபாய்களை ஸ்டாம்ப் வாங்க செலவு செய்யாதபடி **எங்களுக்கு நீங்கள் உதவலாம்.** மற்றவர்களுக்கும் **ஜாமக்காரன்** தேவையானவர்களுக்கும் இதை அறிவியுங்கள்.

‘ இவ்விஷயத்தில் உங்கள் ஒத்துழைப்பை மிகவும் நாடுகிறேன். வெளிநாட்டில் ஜாமக்காரன் வாசிப்போர் எண்ணிக்கை **மிகவும் அதிகமாக** பெருகிவிட்டது. உங்கள் ஒத்துழைப்புக்காகவும். நன்றி.

# ஆளுகை செய்யும் தேவன் நமக்கு சவாலிடுகிறார்



Dr. தியோடர் வில்லியம்ஸ்

வெற்றி பெறவேண்டும் என்ற ஆவல் மனிதருக்கு இருப்பதால், அவர்களை எதிர்த்துவரும் சவால்களை மேற்கொள்ள வல்லவர் களாயிருக்கின்றனர். ஆனால் வேறு வகையானதொரு சவாலை விசுவாசி களாகிய நாம் சந்திக்க தேவன் விரும்புகிறார். இது நம் தலைமுறையினருக்கு நம் பொறுப்பைக் கண்டுக்கொள்வது நல்லது. IEM மிஷனரி ஸ்தாபகரான அருட்திரு. முனைவர். **தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் இந்த சவால்களைக் கீழ்வரும் வசனத்தின் மூலம் பட்டியலிடுகிறார். "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால்" (லூக்கா 19 : 42). இந்த நவீன யுகத்தைக்குறித்து பல காரியங்கள் கூறப்படுகிறது. வழக்கம் போல, சிலர் எதிலும் நலம் காண்கிறவர்களாகவும், சிலர் சந்தர்ப்பவாதிகளாகவும், சிலர் சந்தேகம் நிறைந்தவர்களாகவும், இன்னும் சிலர் தங்கள் **வன்முறைகளால்** தாங்கள் நினைக்கும் கற்பனை உலகத்தை உருவாக்க முயல்பவர்களாகவும் உள்ளனர். ஆளுகை செய்யும் தேவன் எல்லா தலைமுறைகளிலும் தமது செயல்திட்டத்தை அதனதன் காலத்தில் நிறைவேற்றுவதை யாராலும் தடம் புரளச் செய்ய முடியாது.

தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேல் தன் பொறுப்பை நிறைவேற்ற தேவன் அவ்வப்போது அதை அழைக்கிறார். தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் கடிந்து கொள்ளுதலின் பின்பும் கர்த்தருடைய காரியங்களில் கருத்து செலுத்துவதாக இல்லை. ஆகையால் கர்த்தர் மிகுந்த வேதனையோடு எருசலேமைப் பார்த்து கண்ணீர் சிந்தி, **"உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் . . . . .**"(லூக்கா 1: 42) என கூறுகிறார். எருசலேமின் பிரச்சனை என்னவென்றால், அதற்கு கிடைத்த நாளை - அதற்குக் கிடைத்த தருணத்தை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை.

**நமக்கோ இது தீவிரமாக அர்ப்பணிக்கும் நாள்** ஆகும். கிறிஸ்துவின் சீடர்களாகிய நமக்கு இது ஒரு **வாஞ்சை மிகுந்த அர்ப்பணிப்பின் நாள்,** நான் ஏன் **"வாஞ்சை மிகுந்த அர்ப்பணிப்பு"** என்று கூறுகிறேன் என்றால் அர்ப்பணிப்புகளுக்கு மேல் அர்ப்பணிப்பு அனேகம் உள்ளன. கிறிஸ்தவ ஐக்கியங்களில் மகிழ்ந்து, பல்லவிகள் பாடி நம்மையே மகிழ்வித்து அதனோடு நின்று விடுகிற ஒரு வித அர்ப்பணிப்பு நமக்கு உண்டு என்று நன்றாகத் தெரியும். ஆனால் நம்முடையது **இரத்தசாட்சிகளின் விசுவாசம்** ஆகும். அதன் அடையாளம் சிலுவை. அதன் நினைவுசின்னங்கள் அடிநில கல்லறைகள். ஆகவே நாம் இதை சொகுசு மதமாகவோ,கைநழுவும் மக்களின் வசதியான அடைக்கலமாகவோ மாற்றிவிடவேண்டாம். கிறிஸ்துவுக்கு தேவையானவர்கள் சிலுவை வீரர்கள் - சாக்லட் வீரர்கள் அல்லர் அனேக நேரங்களில் நம் அர்ப்பணிப்பும், சீஷத்துவமும் கிரயம் செலுத்தத் தேவையில்லாதவைகளாக இருக்கின்றன. 1நாளா . 2:24-ல் தாவீது, நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி, கர்த்தருக்கு சர்வாங்க தகனத்தைப் பலியிடாமல் . . ." என்று கூறுகிறார். உறுதியான அர்ப்பணிப்பு விலையுள்ளது. அதன் கிரயத்தை கணக்குப் பார்க்க அழைக்கப்படுகிறோம். நம் ஜெப வாழ்க்கை, கொடுத்தல், கிறிஸ்துவிடம் நாம் **சரணடைதல்** ஆகியவை நமக்கு கிரயமாக இருக்கிறது நாம் அதை செலுத்த வேண்டியதாய் இருந்திருக்கிறதா? நாம் ஜெபித்து, நோவை அனுபவிப்பது வரைக்கும் கர்த்தருக்குக் கொடுக்கிறோமோ? அவர் எங்கே அழைக்கிறாரோ அங்கு விசுவாசத்துடன் செல்ல தைரியம் கொள்ளுகிறோமா? நாம் இவற்றிக்கு கீழ்ப்படிந்தால் அவருடைய மகிமைக்கென தருணங்களை கர்த்தர் நமக்கு கொடுப்பார்.

**நமக்கு இது சவாலின் நாள் :** உலகிலேயெ பெரிய ஊழிய பணிக்களமாக இன்னும் இந்தியா உள்ளது. பலவிதமான சவால்விடும் தேவைகள் மத்தியில் நாம் வாழ்கிறோம். இந்த தேசத்தின் அதிகமான மக்கள் கிராமங்களில்தான் வாழ்கின்றனர்.இவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவின்நாமத்தை ஒருமுறைகூட கேள்விப்படாதவர்கள். ஒரு அருங்காட்சியத்துக்கு சில கிராமவாசிகள் மரத்தில் செதுக்கப்பட்ட ஒரு உருவத்தைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர். ஒருவர், **"இது யார்?"** என்றும், மற்றொருவர் "இது ஒரு **கடவுளா?"** எனவும் மூன்றாமவர், "ஏன் இவர் இவ்விதம் தொங்கிக் கொண்டிருக்கிறார்?" எனவும் வினவினர். அவர்கள் யாவரும் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவின் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். என்ன கண்டனம்! என்ன சவால்! இயேசு 2000 ஆண்டுகளுக்கு முன்னால் மரித்து, உயிர்த்து இன்றும் இயேசு வாழ்கிறார். ஆனால் **என**

**வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வாழும் மக்கள் இவர் யார்** என அறியாமல், ஏன் சிலர் மரித்தும் இருக்கின்றனர். இன்றும் இயேசு யார்? என்று அறியாமல் இருக்கின்றனர். இது சவால்தானே?, மத். 24 :14ல் நம் ஆண்டவர் தெளிவாக ராஜ்யத்தின் நற்செய்தி உலக முழுவதிற்கும் சாட்சியாக எல்லா ஜனங்களுக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும். பின்புதான் உலகத்துக்கு முடிவுவரும் என கூறியுள்ளார். **தனிமனிதனாகவும்,கூட்டாகவும்** நற்செய்தியை அறிவிப்பதில் நாம் ஈடுபடாவிட்டால் **ஆண்டவரின் வருகையை** எவ்விதம் நாம் துரிதப்படுத்த முடியும்? இது உண்மையாகவே ஒரு பெரிய சவால்! **நமக்கு இது ஒரு செயல்புரியம் நாள்:** எவ்விதமாக செயல்படுத்தவேண்டும்? மூடி வேதாகமம் சங்கத்தைச் சார்ந்த வில்லியம் ஹீட்டன், "ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் போர் வீரர்களாயிருந்தனர். இப்போது சுற்றுலா பயணிகளாக மாறிவருகின்றனர். ஒரு காலத்தில் **சிலுவைவீரர்,** இப்போது அவர்கள் மதிப்புள்ள நிலச்சுவான்தார்களாக இருக்கிறார்கள்" என்கிறார். இது எவ்வளவு உண்மை! ஒவ்வொரு மிஷனெரி ஊழியரும் "உலகமெங்கும் சென்று படங்கள் எடுத்து ஒவ்வொரு **மனிதருக்கும்** அதை அனுப்பி கடிதம் எழுதுபவர்களாக மாறி குறைந்துவிட்டனர். இயேசுகிறிஸ்துவின் இறுதி கட்டளையின் விபரீதமான நடைமுறை இது! சபையின் முக்கிய பகுதி **சமூக நற்செய்தியைப் பரப்புவதில் கவனம்** செலுத்தும்போது, உலகத்தின் எல்லைகள் வரைக்கும் இரட்சிப்பின் செய்தியை பறைசாற்றும் அறைகூவல் வருகிறது. அதோடு **நீங்கள் சமூகத்திற்கும், மக்களுக்கும் அன்புக்கூர்ந்து சேவை செய்யும்** பொறுப்பையும்விட்டுவிடாமல், அதேநேரத்தில் நம் முக்கியவேலை,எல்லா மனிதவேதனைகளுக்கும் பதிலாகிய நற்செய்தியைப் பிரசங்கிப்பதே ஆகும் என்பதை நாம் உறுதிசெய்யவேண்டும். ஆகவேதான் பவுல் ரோமர் 1:16ல் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்: முன்பு யூதரிலும் - பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" என்றார்.

**நமக்கு இரு தருணத்தின் நாள் :** எதிர்ப்புகளும், தடைகளும் கூடிக் கொண்டிருந்தாலும் நற்செய்தி அறிவிக்க தருணங்கள் இன்னும் உள்ளன. மிஷனெரி சரித்திரத்தில் உபத்திரவத்தின் காலங்களில் தான் அதற்கு அதிக தருணங்கள் உள்ள நாட்களாகவும் இருந்திருக்கிறது. இவ்வித தருணங்களில் நற்செய்திப் பணிகள் முடக்கப்படுவது வேதனைக்குரியது. தேவை பின்வாங்குவதல்ல. புத்தியோடு செயல்படுவதே கட்டமைப்புகள் கைவிடலாம்: பொறுப்பான பதவிகள் கைமாறலாம்: ஆனால் நிச்சயமாகவே தருணங்களை விட்டுவிடவோ,ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிக்கும் பொறுப்பை நழுவவிடவோ செய்வதற்கு இது நேரமல்ல. "காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான்: மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்"என பிரசங்கி 11:4கூறுகிறது. ஆதித் திருச்சபை கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய காற்றையோ, காலநிலையையோ நோக்கவில்லை. **ஆகவே இது ஒரு ஈடுபடும் நாள் : ஈடுபடுதல்** என்றால் என்ன? **சார்லஸ் பேட்ஸ்** ஒருமுறை **Dr. கூப்பர்** என்ற ஒரு மிஷெனரிக்கு. " ஊழியத்தில் 5.000 டாலர்கள் உபயோகிக்க முடியுமா?" என கடிதம் எழுதினார். தொடர்ந்து அனேக பொருள்களையும் அவருக்கு அனுப்பி தன் பெயர் வெளிவரக்கூடாது என கூறினார். திரு. பேட்ஸ் அவர்களின் மரணத்திற்குப் பின், **Dr.கூப்பர்** இறுதிவரைக்கும் அவர் எழுதிய நாட்குறிப்பேட்டைப் பார்த்தார். பணித்தளங்களிலிருந்து அவர் **பெற்றுக்கொண்ட காணிக்கை பொருள்கள்** ஆகியவைகளை கொடுத்தவர்களின் பெயர்களின் நீண்டபட்டியல்கள் இருந்தது. அதோடு அந்த ஊழியங்களுக்காக ஒரு முறையோ பலமுறைகளோ ஜெபித்தவர்களின் பட்டியல்களும் இருந்தது. அந்த பட்டியலில் 27,994சீனர்களும்,16,170 ஆப்பிரிக்கரும், 9,533 இந்தியர்களும் 6000 ஜப்பானியர்களும் இருந்தனர். அவருடைய காணிக்கை 26,000 டாலர்கள். அவர் மரித்தபின் அவர் விட்டுச்சென்ற பணத்தில் ஒரு நல்ல கார்கூட வாங்க முடியாது! இதுதான் ஈடுபாடு! மிஷெனரி அழைப்பு எல்லாருக்கும் வருவதல்ல. ஆனால் மிஷெனரி ஈடுபாடு எல்லா விசுவாசிகளுக்கும் இருக்க வேண்டும். **"பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் : இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்றேன்"** (ஏசா. 6 : 8) கர்த்தரின் சத்தம் இப்போதும் நம்மை ஈடுபட அழைக்கிறது நாம் **"இதோ அடியேன் ..."**என்று பதிலளிப்போமா?. கர்த்தரின் ஆளுகை **ஒவ்வொரு தலை முறையினரையும்** எல்லா மொழி பேசுகிறவர்களையும் உள்அடக்கும்(வெளி 7:9) உலகம் **உச்சக்கட்டத்தை நெருங்கிச்** சென்று கொண்டிருக்கிறது. ஆளுகை செய்யும் கர்த்தர் **நம் காலத்தில், நம் தலைமுறையில்** நாம் மிஷனிரி பணியில் ஈடுபட **நமக்கு சவாலிடுகிறார்.**

***************

# 2017 மார்ச் 21ம் தேதி வரை என் வங்கி சேமிப்பு விவரம்

**STATE BANK OF INDIA**(SALEM-1970)
**A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842
**20.03.2017 CREDIT = 10000.00 BALANCE=28950.09**

**CANARA BANK - SALEM**
(SURAMANGALAM BRANCH)
**A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.
**16.03.2017 CREDIT = 500.00 BALANCE=48447.00**

**STATE BANK OF TRAVANGORE**
(SALEM BRANCH CODE - 70328)
**A/C No: 57041760879.**
SWIFT CODE - SBTR0000328- 57041760879
IFSC CODE SBTR0000328, RBCMS BXX - 57041760879.
**21.03.2017 CREDIT = ...... BALANCE=1619.35**

**SYNDICATE BANK**
(SALEM SURAMANGALAM BRANCH)
**A/C.No: 2200009312.**
SWIFT CODE - SYNBINBB027 6293-2200009312.
IFSC CODE - SYNB0006293-2200009312.
**18.03.2017 CREDIT = 1000.00 BALANCE= 16770.98**

**INDIAN OVERSEAS BANK**
**SALEM MAIN**
**A/C/NO.008001000024114**
IFSC CODE – IOBA0000080
**09.03.2017 CREDIT = 3200.00 BALANCE=4889.30**

**2017 மார்ச் மாதம் 21ம் தேதி வரை அனைத்து வங்கிகளிலும் இருந்த என் சேமிப்பு பணத்தின் மொத்தம் : 100676.72 ஆகும்.**

**குறிப்பு:** வருடத்துக்கு ஒருமுறை என வங்கி பணவிவரம் என் வாசகர்களுக்கு அறிவிப்பது என் வழக்கம். அதோடு என் **வங்கி அக்கவுண்ட் நெம்பர்** கேட்டு எழுதும் வாசகர்களின் வசதிக்காக என் 5 வங்கிகளின் அக்வுண்ட் நெம்பர் விவரங்களையும் இதோடு வெளியிடுகிறேன்.

இம்மாதம் எனக்கு வந்த மொத்த காணிக்கையின் வரவு குறைவாக காணப்பட்டாலும் ஊழியத்தின் ஒவ்வொரு மாத பணத்தேவைக்கும்,பத்திரிக்கை செலவுக்கும் தேவையான பணம் என் வாசகர்கள் மூலமாக சில நாட்களுக்குள்ளேயே போதுமான அளவு எனக்கு வந்து சேர்ந்து விடுவதுதான் அற்புதம். அதனால்தான் ஒருமாதம்கூட **பணக்குறைவோ,கடனோ எனக்கு ஏற்பட்டதில்லை!.** கர்த்தருக்கே சகல கனமும், மகிமையும் உண்டாவதாக. இதுவரை என் ஊழியத்துக்காக பணஉதவி, ஜெபஉதவி செய்த அத்தனை விசுவாசிகளுக்கும்,ஊழியர்களுக்கும், வாசகர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

2017 மார்ச் மாதம் 21ம் தேதிதான் ஏப்ரல்மாதத்துக்குறிய ஜாமக்காரனின் செய்திகளை தயாரித்து முடித்தேன். அந்த 21ம் தேதி அன்று அனைத்து வங்கிகளின் அன்றைய நாள்வரை உள்ள சேமிப்பு பணத்தைத்தான் உங்கள் பார்வைக்கு சமர்பித்துள்ளேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

# CSI TUTICORIN-NAZARETH DIOCESE
# - St.PAUL'S CHURCH - MEIGNANAPURAM
# 170th CHURCH DAY CONVENTION








CSI சபைகளில் சரித்திர பிரசித்திபெற்ற சபைகளில் முக்கிய இடம்வகிப்பது **மெய்ஞானபுரம்** சபை ஆலயம் ஒன்றாகும். இங்கு நடந்த ஆவிக்குரிய கூட்டங்கள் யாவும் மிகச் சிறப்பாக நடந்தது. திருமண்டலத்தில் நல்ல முதிர்ச்சி பெற்ற ஆவிக்குரிய ஆயராக Rev. **எபினேசர் தேவராஜ்** அவர்கள் தலைமை போதகராக இக்கூட்டங்களை ஜெபத்துடனும், நல்ல ஆயத்தத்தோடும் நடத்தியதால் கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது. உதவி ஆயர் Rev. அந்தோனிதாஸ்,உபதேசியார், சபை பொருப்பாளர்கள் இணைந்து இக்கூட்டங்களை சிறப்பித்தார்கள்.

## இந்த ஆலயத்தின் சிறப்பு

**மெய்ஞானபுரம்** என்ற இந்த ஊரில் ஒரு கிறிஸ்தவர்களும் இல்லாத காலத்தில் சுமார் 170 ஆண்டகளுக்குமுன் Rev. **ரேனியர்** மிஷனரி தலைமையில் Rev. **ஜான் தாமஸ்** மிஷனரி அவர்கள் தன் குதிரையில் அமர்ந்து கிராமம் கிராமமாக சுவிசேஷம் அறித்தபடி வந்துகொண்டு இருக்கும்போது இந்த **மெய்ஞானபுரம்** என்ற கிராமத்தித்துக்கு வந்துசேர்ந்தார். அங்கு ஒரு **இலந்தை** பழ மரத்தின் அருகே ஒரு **கல்லை வைத்து பூஜை** நடத்தியும் **குறி சொல்லியும்** வந்த ஒரு பூசாரி குடும்பம் தலைமுடி விரித்தப்படியும் உடம்பெல்லாம் நடுங்கியபடியும் உடம்பை குலுக்கியபடி மிகுந்த அலரல் சத்தத்துடன் அந்த விக்கிரகத்துக்கு முன் ஆடிக்கொண்டு பூஜை நடத்திக்கொண்டு இருக்க சுற்றுவட்டார கிராம மக்களும் அங்கு வந்து அவளை சூழ்ந்துக்கொண்டு பூஜையில் கலந்துகொண்டிருந்தார்கள்.

**குறிப்பு :** இதே காட்சியைதான் இன்று **பெந்தேகோஸ்தே** சபைகளில் **துதி ஆராதனையிலும்** கடைசி **ஜெப வேளையிலும்** காது கேட்காத தெய்வத்தோடு இந்த கிராம மக்கள் பேசுகிறதைப்போல் கைகளை வேகமாக தட்டி இயேசுவின் காதுகேட்காதா என்பதுபோல சத்தமாக கைகளை தட்டியும் கூக்குரல்இட்டும், குதித்துகொண்டு உரத்த குரலில் கூவியும

ஜெப வேண்டுகொள் எதுவும் இல்லாது வெறும் **அல்லேலுயா அல்லேலுயா ஆமென்** ஆமென் என்று மட்டும் உரத்த குரலில் சத்தம்போட்டு அர்த்தமில்லாமல் அலருகிற பெந்தேகோஸ்தே நண்பர்களைப்போல இந்த பூஜையிலும் காணப்பட்டதாக சிலர் கூறக்கேட்டேன் சிலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள். எங்க மாரியம்மன் கோவிலில் நாங்கள் இப்படித்தான் சத்தம்போட்டு **கூவுவோம், குதிப்போம். கைகளை தட்டுவோம். எங்களுக்கும் பெந்தேகோஸ்தே சபைக்கும் ஒரு வித்தியாசமும் இல்லையே?. அதே பிசாசின் சேஷ்டை** இங்கும் காணப்படுகிறதே. ஒரு வித்தியாசம் காண்கிறோம் இங்கு **இயேசு** என்ற பெயரில் இவர்கள் குதிக்கிறார்கள்,உளருகிறார்கள். அங்கு அப்படியில்லை அவ்வளவுதான் என்றார்கள். அவிசுவாசி உங்கள் பாஷைகளை கண்டால் உங்களை பயித்தியகாரர் என்பார்களே என்று பவுல் எழுதியதைபோல் பாஸ்டரோடு சேர்ந்து சபை ஜனங்களும் இப்படி பைத்தியம் பிடித்தவர்களைப்போல் ஆடி ஆர்பாட்டம் செய்கிறார்களே. என்ன கூத்து இது? இப்படிப்பட்ட கேள்விகளும் பெந்தேகோஸ்தே சபையினர்தான் பதில் கூறவேண்டும்.

இந்த மிஷனரி சம்பவத்தை நான் கூறும்போது பெந்தேகோஸ்தே சபையினரின் இப்படிப்பட்ட மாய்மாலத்தை சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லையே?

**இப்போது சரித்திர சம்பவத்தை கவனிப்போம்.** அன்று மெய்ஞானபுரத்தில் பூஜை நடந்துக்கொண்டிருப்பதை Rev.**ஜான்தாமஸ்** மிஷனரி அவர்கள் அருகில் உள்ள பனைமரத்தில் சாய்ந்தபடி இவர்களின் அறியாமையை கண்டு **மன வேதனையோடு** பார்த்துக்கொண்டிருந்தார். எப்படி இவர்களுக்கு உண்மையான தெய்வத்தை புரிந்துகொள்ள வைப்பது என்று ஜெபித்துக் கொண்டிருந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

அப்போது திடீரென்று ஒரு சம்பவம் நடந்தது. கூட்டத்தின் அருகில் மரத்தின் அடியில் இருந்த ஒரு பையனை பாம்பு கடித்துவிட்டது. அவன் அம்மா என்ற சத்தத்துடன் வாயில் நுரை வெளியேற விழுந்துவிட்டான். கூட்டம் அவனை சூழ்ந்துகொண்டது. பாம்பு கடிப்பட்ட பையன் பூசாரியாக இருந்த அந்த பெண்ணின் மகன் என்று அறிவிக்கப்பட்டவுடன் பூசாரியின் நடுக்கம் சத்தமெல்லாம் நின்றது.

**பெந்தேகோஸ்தே** சபைகளில் பாஸ்டர் **பாஷையில் பேசுவோம்** என்றால் சபை மக்களும் உடனே பாஷையில் பேசுவார்கள். நிறுத்துங்கள் என்றால் சபை மக்களின் அன்னிய பாஷையும் நின்றுபோகும். ஆவியானவரை வேலைக்காரனைபோல் கட்டுப்படுத்தும் **பாஸ்டர்களைபோல்** ஆவியாவரை தன் கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கும் பாஸ்டர்களைபோல இந்த பூசாரி அம்மாவும் சத்தம்போடுவதை நிறுத்த, சுற்றிலும் உள்ளவர்களின் **ஆட்டமும்** நடுக்கமும் நின்றது. பூசாரி குடும்பம் ஓடிவந்து **மகனே மகனே போய்விட்டாயா** என்று கதறி ஒப்பாறி வைத்து அழ உடனே **மிஷனரி தாமஸ் அவர்கள்** கர்த்தர் தனக்கு வாய்ப்பு கொடுக்கிறார் என்று உணர்ந்து உடனே கூட்டத்தில் புகுந்து அந்த பையனின் பாம்பு கடித்த காலை தன் மடியில் வைத்து பாம்பு கடித்த இடத்தை தன் பாக்கொட்டிலுள்ள பேனா கத்தியால் கீறி காயப்படுத்தி ரத்தத்தை உறிஞ்சி துப்ப விஷம் முழுவதும் இறங்கியது. **ஜெபித்தார் துதித்தார்.** அதை கண்ட **பூசாரிஅம்மாவும்** குடும்பத்தினரும் அவரை நன்றியுடன் கையை கூப்பி வணங்கி அதன்பின் மிஷனரி கூறிய சுவிசேஷத்தைகேட்டு அந்த இடத்தில் அந்த **பூசாரி குடும்பம் இயேசு கிறிஸ்துவை** குல தெய்வமாக ஏற்றுக்கொண்டது. அவர்களோடு மேலும் **மூன்று குடும்பங்கள்** இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு பிறகு அவர்களுக்காக மிஷனரி அடிக்கடி மெய்ஞானபுரம் வந்து வேத வசனத்தை போதித்தார்.

அதன் பின் அவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுத்து அந்த நான்கு குடும்பங்களை வைத்து அங்கு ஆராதனை நடத்தினார். சின்ன குடிசையில் வைத்து ஆராதனை நடந்தது. அதன்பின் தாமஸ் மிஷனரி அவர்களை அனுப்பி வைத்த சபை Rev. தாமஸ் அவர்களுக்குஅனுப்பிய பணம் கொண்டு ஒரு **பெரிய ஆலயத்தை** கட்டினார். **நான்கு குடும்பங்கள்** மட்டும்உள்ள அந்த சபை மக்களுக்கு **700 பேர் உட்கார்ந்து** ஆராதிக்கும் மிகப்பெரிய **ஆலய கட்டிடத்தை** விசுவாசத்தோடு கட்டி முடித்தார்.

அவரின் **விசுவாசத்தின்படியே** அந்தக் கிராம மக்கள் அனைவரும் ஞானஸ்நானம் எடுத்து சபையில் இணைந்து ஆராதித்தனர். **Rev. ஜான் தாமஸ்** மிஷனரி அவர்களின் விசுவாசத்தையும், எதிர்பார்ப்பையும் கர்த்தர் கௌரவப்படுத்தி அங்கீகரித்து ஆசீர்வதித்தார்.

## அசனம்

இப்படிப்பட்ட **சரித்திர** பிண்ணனியில் உள்ள **மெய்ஞானபுரம்** பரிசுத்த பவுலில் ஆலயம் வருடா வருடம் கர்த்தருக்கு நன்றி கூறும் வண்ணமாக **அசனம்** என்ற பெயரில் (**அசனம்** என்றால் **உணவு**) (2 சாமு 9:11) ல் என் பந்தியிலே **அசனம் பண்ணுவான்** என்ற வசனத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 50000 மக்களுக்கு மெய்ஞானபுரம் **அசனத்தில் ஆகாரம்** உண்டு பண்ணி பறிமாறுகிறார்கள். அந்த விசேஷித்த பிரதிஷ்டை நாளை ஒவ்வொரு வருடமும் மிகச்சிறப்பாக கொண்டாடுவார்கள்.

இதில் விசேஷம் என்னவென்றால் **திருநெல்வேலி** டையோசிஸ், **தூத்துக்குடி** டையோசிஸ் ஆகிய அனைத்து திருமண்டலத்தில் இருந்தும் **வெளி மாநிலங்களிலிருந்தும்** இந்த அசன விருந்தில் (கை வைப்பார்கள்.) கலந்துகொள்வார்கள். **மெய்ஞானபுரம்** அசனம் **திருநெல்வேலி** மாவட்டத்திலேயே சிறப்பு பெற்றது.

இப்படிப்பட்ட அசன பண்டிகையென்பது **திருநெல்வேலி, தூத்துக்குடி** மாவட்டத்தில் மிக பிரசித்தம். இந்த மாவட்டத்தில் உள்ளவர்கள் இந்தியாவின் **எந்த மாநிலங்களில்** மாவட்டத்தில் வாழ்ந்தாலும் அங்கெல்லாம் **அசன விருந்தை** அறிமுகப்படுத்திவிடுவார்கள்

எங்கள் **சேலத்தில்** கிறிஸ்துநாதர் CSI ஆலயத்தில் **நெல்லை மாவட்டத்தை** சேர்ந்தவர்கள் அதிகமானவர்கள் அங்கத்தினராக இருக்கிறார்கள். இப்போது **சில வருடங்களாக** இந்த ஆலயத்திலும் **அசனம்** விருந்து வருட வருடம் நடத்த தொடங்கிவிட்டனர்.

தமிழ்நாட்டில் **கர்நாடகாவிலும்** மற்ற டையோசிஸ்ஸை சேர்ந்த CSI ஆலயங்களலும்கூட திடீரென்று **அசன விருந்து** தொடங்கிவிட்டார்கள் என்றால் அந்த ஆலயத்தில் **நெல்லை மாவட்ட மக்கள்** அதிகம் இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

## இது நல்ல ஏற்பாடுதான் ஆனால்

இது நல்ல ஏற்பாடுதான் ஆனால் நாளடைவில் இது **சடங்காக விக்கிரகமாக** மாற ஆரம்பித்துவிட்டது. பம்பாயில் ஒரு சகோதரன் கூறும்போது என் உடல் நலம் தேறிவிட்டது, இருதய ஆபரேசன் முடிந்துவிட்டது. ஆகையால் நான் மரிப்பதற்குமுன் எங்கள் சொந்த ஊர் **மெய்ஞானபுரம் அசனத்தில்** ஒருமுறையாவது **கை வைத்தால்** போதும் என்று கூறுமளவு அது அவருக்கு **விக்கிரகமாக** போய்விட்டது.

அமெரிக்காவிலுள்ள நெல்லை -தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த கிறிஸ்தவர்கள் **அசனத்தில்** கலந்துகொள்ளவேண்டி மட்டும் 4 வருடத்திற்கு ஒருமுறை **இந்தியா** வந்து போகிறவர்கள் உண்டு.

## சாட்சி இல்லா இரவு ஆயத்தம்

அதே சமயம் சிலர் ஊர் சபைகளில் நடக்கும் **அசனத்துக்கு சாப்பாடு ஏற்பாடுகளுக்காக** மறுநாள் நடக்கும் **அசனத்திற்கான** ஆகார பொருட்கள் தயார் செயவதற்கு **சபை கமிட்டி** தனவான்கள் இரவு நேரத்தில் சமையல்காரர்களுக்கு உதவி செய்வதுபோல் அல்லது மேற்பார்வையிடுவதுபோல ஆலயத்தின் பின்புறம் இருட்டான பகுதியில் **மதுபானபாட்டில்களுடன்** வீட்டில் கோழி பொறித்துகொண்டு வந்து **அவர்கள் மதுபானம் குடிக்கும் காட்சியும்,** குடித்துவிட்டு கீழே போட்ட **பாட்டில்களின் குவியல்களையும்** சிலர் புகைப்படம் எடுத்து எனக்கு அனுப்பியுள்ளார்கள். ஏதாவது **சில சபைகளில்** மட்டும் இப்படிப்பட்ட தவறு நடப்பதால் **அந்த படத்தை வெளியிட நான் விரும்பவில்லை.**

சமையல் நடக்கும் அடுப்புக்கு அருகிலேயே **மது பானம்** ஊற்றி குடித்து உளரும்காட்சிகள் **தேவனின் மனதை** வேதனைப்படுத்தும் காட்சியாகும். இதற்காக பாடுபட்ட Rev. ரேக்ஜன்ட், Rev.ரேனியஸ், Rev.ஜான்தாமஸ் Rev. சார்ஜண்ட் ஆகிய மிஷனரிகள் இந்த காட்சியை காண நேர்ந்தால் என்ன நினைப்பார்கள்?. இதற்காகவா **சுகம் இழந்து, சீதோஷனநிலை மாற்றத்தால் உடல் நலிந்து, நான்கு மாதங்கள்** கப்பல் பயணங்களில் **வாழ்வா சாவா** என்ற நிலையில் பயணம் செய்து இந்திய வந்து சேர்ந்து, இந்தியாவில் வேகாத வெயிலில் பல மைல்கள் **கால்நடையாகவே** நடந்த களைப்பால் **தொப்பியில் தண்ணீர்** வாங்கி குடித்து அந்த மிஷனரிகள் இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு இவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தாரகள்?. அப்படியே இவர்களின் பிள்ளைகளின் வாழ்வுக்கு பள்ளிக்கூடம் **கல்லூரி,** உடல் சுகத்துக்கு **ஆஸ்பத்திரி** கட்டிக்கொடுத்தார்கள். ஆனால் இந்த சபை பொருப்பாளர்களோ அதில் பண ஊழல்செய்து ஏழை கிறிஸ்தவர்களை கண்ணீர்விடவைத்தார்களே, **அசனம்** என்ற பெயரில் சாராயமும் குடித்து மகிழ்ந்தார்களே என்று நமக்காக மிஷனரிகளை அனுப்பிவைத்த கர்த்தர் எத்தனையாய் வேதனைப்படுவார். யோசித்துப்பாருங்கள்.!

இப்படிப்பட்ட சாட்சியில்லா காரியங்களை **பரிசுத்த ஆலயத்தில் வளாகத்திலேயே** குடித்து வெறிக்கும் சபை **கமிட்டியிலுள்ளவர்களுக்கு,** அய்யோ! என்று வேதம் கூறுகிறது. எச்சரிக்கை.!

**ஆசீர்வாத தட்டைபோல, அசனத்தையும்** விக்கிரகமாக்கி சபை மக்களுக்கு கர்த்தரிடமிருந்து **தேவ கோபத்தை** வருத்துவிப்பவர்களாக இருக்கவேண்டாம். **யாரால் இடறல் வருகிறதோ** அவர்களுக்கு ஐயோ என்று இயேசு கூறினார். சபை வாலிபர்கள் இப்படிப்பட்ட சபை பொருப்பாளர்களை பின்பற்ற முடியுமா? இவர்களை சபை வாலிபர்கள் மதிப்பார்களா? இவர்களுக்காக சபை மக்கள் ஜெபியுங்கள்.

# தமிழ்நாட்டில் மிஷனரிகளின் வருகை

### குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தை சந்தித்த மிஷனரிகளின் விபரம்

திருநெல்வேலி அனைத்திற்கும் பொருப்பெடுத்து சுவிசேஷம் அறிவித்து **சபைகளை** ஸ்தாபித்த பெருமையும் ஆசீர்வாதமும் **Rev. ரேனியஸ், Rev. ஜான் தாமஸ்** இவர்களுக்குத்தான் போய்சேரும் என்றால் அது மிகைஆகாது.

இவர்கள் மிஷனரி ஊழியங்களை திட்டமிட்டு செயல்படுத்தினார்கள். முதலில் திருநெல்வேலி மாவட்டத்தை 6 பகுதிகளாக **பிரித்து** மிஷனரி ஊழியம் செயல்படுத்தினர். (திருநெல்வேலி) வடக்கு Rev. ரெக்லாந்து அவர்களின் பொருப்பில் ஊழியம் வளர்ந்தது.

| | |
|---|---|
| தெற்கு | - Rev. ஜான் தாமஸ், |
| வட கிழக்கு | - ஜோன்ஸ் மிஷனரி அவர்கள் |
| கீழ் பகுதி | - தாமஸ் டக்கர் |
| மத்திய பகுதி | - சார்ஜண்ட் |
| வடமேற்கு பகுதி | - புரூக் அவர்கள் |
| மேற்கு பகுதி | - பால் ஷாப்பர் அவர்கள் |

ஆகிய இவர்கள் தாங்கள் பேசி பிரித்துக்கொண்ட **அவரவர்களின் பகுதியில்** சிறப்பான மிஷனரி ஊழியம் செய்ததால் இன்று திருநெல்வேலியில் தாழ்த்தப்பட்ட இனமாக கருதப்பட்ட **நாடார் சமூகம்** படிப்பிலும், ஞானத்திலும் பதவியிலும் உயர்ந்து **மிஷனரி ஊழியத்திலும்** முன்னனியில் இருக்கிறார்கள். இவர்கள் **பதவி** பட்டம் பணம் உயர்ந்த படிப்பு யாவையும் துச்சமாக கருதி இன்று **வட இந்தியா முழுவதும்** ஆயிரக்கணக்கில் சபை எழும்ப தமிழ்நாட்டில் குறிப்பாக **நெல்லை, கன்னியகுமரி** மாவட்ட விசுவாசிகள் காரணமானவர் களானார்கள். ஊழியத்துக்கும் **ஊழியக்காரர்களுக்கும்**, ஆலய கட்டுமான பணிக்கும் **காணிக்கை** கொடுப்பதில் முந்திக்கொள்வது **திருநெல்வேலி** கிறிஸ்தவர்களும் **கன்னியாகுமரி** கிறிஸ்தவர்களும் தான் அதிகம் என்றால் அது மிகைஆகாது.

அதனால்தான் அந்த மாவட்டங்கள் கர்த்தரால் விசேஷித்த பிரகாரம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. இந்த குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகள் படிப்பில் உயர்ந்து, பட்டதாரிகளாகவும்,பெருத்த பணக்கார வியாபாரிகளாகவும், ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தியாவில் அனைத்து **மாநிலத்திலும், வெளிநாடுகளிலும்,** அரசாங்கத்தில் இவர்கள் உயர் பதவி வகிக்கிறார்கள்.

**என்னை கனம் பண்ணுகிறவனை நான் கனம் பண்ணுவேன்** என்று கர்த்தர் சொன்னார். 1 சாமு 2:30.

vvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvv

# முக்கிய அறிவிப்பு

**டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ்அப்,பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் அந்த வாட்ஸ்அப், பேஸ்புக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன்.**

**அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன்.**

**- டாக்டர் புஷ்பராஜ்**

# மரண அறிவிப்பு



தூத்துக்குடி **பிரபல வழக்கறிஞரும்** ஜாமக்காரன் பத்திரிகையின் நீண்ட கால வாசகரும் என் ஆவிக்குரிய தம்பியுமான சகோ K.**பொன்ஜேம்ஸ்** (வயது 51) அவர்கள் சில நாட்களாக பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவம் பயனளிக்காமல் 11-3-2017 அன்று கர்த்தரின் பாதத்தில் சேர்ந்தார். இவர் மரிக்கும்போது சகல ஆவிக்குரிய ஆயத்தத்துடன் தன் ஆவியை கர்த்தரிடம் ஒப்படைத்தார். அவர் கர்த்தருக்குள் மரித்தார் என்பதை உறுதியுடன் கூறலாம்.

என் ஜாமக்காரன் ஊழியத்தை ஒவ்வொரு மாதம் தவறாமல் குறிப்பிட்ட தேதியில் **காணிக்கை** அனுப்பி என் ஊழியத்துக்காக தினசரி ஜெபித்து என் ஊழியத்தை தாங்கி நிறைவேற்றினார். என் ஊழியத்தை மட்டுமல்லாமல் வேறு பல ஊழியங்களையும் மாதாமாதம் தாங்கி உதவியவர் என்பதை அறியும்போது பெருமையாக இருக்கிறது.

அவர் செய்யும் வக்கீல் தொழிலில் தன்னிடம் வரும் நபர்களுக்கு இயேசுவை எந்த விதத்திலாவது அறிவிக்கும் பாரம் உள்ளவர். **சில்லாங்குளம்** என்ற கிராமம் ராஜாவின் கோவில் என்ற கிராமம் ஆலயம் போன்ற கிராம ஊழியங்களை தன்மூத்த அண்ணனும் பிரபல ஆடிட்டர் திரு. **பொன் பாண்டி** அவர்களுடன் இணைந்து அந்த கிராம ஊழியத்தில் ஈடுபடும் ஆத்துமபாரம் உள்ளவர். நூற்றுக்கணக்கான இந்துமத புற மதஸ்தர்களின் பிள்ளைகளுக்கு ஞாயிறு பள்ளி VBS போன்ற வகைகளிலும் கர்த்தருடைய ஊழியத்தை பாரத்தோடு நிறைவேற்றினார்.

தம்பி.**பொன்ஜேம்ஸ்** அவர்களுக்கு மனைவி, இரண்டு பிள்ளைகள் உண்டு. தன் பிள்ளைகளை மிக ஆழமாய் நேசிப்பவர். பிள்ளைகள் இருவரும் தன்தாயைவிட தகப்பனையே மிகவும் நேசிப்பார்கள். சகோதரின் மரணம் அவர் குடும்பத்தையும்,கூடபிறந்தவர்களையும் உலுக்கிவிட்டது என்றால் மிகையாகாது.

நான் பாடிய **"காலமுமோ செல்லுதே" என்ற பாட்டை** அவர் மிகவும் விரும்புவார்.

சகோ பொன் ஜேம்ஸ் அவர்கள் செய்து நிறைவேற்றிய பல ஊழியங்களுக்காக அவருடைய நல்ல குணத்துக்காக தேவனைத் துதிக்கிறேன். கர்த்தர்தாமே சகோதரனின் குடும்பத்தை ஆறுதல்படுத்துவாராக. இவர் பெற்ற தாயையும் இவர் மிக அதிகம் நேசிப்பவர். மகனை இழந்த அந்த தாயையும் கர்த்தர் தேற்றுவாராக. ஆமென்.

## பிழை திருத்தம்

2017 பிப்ரவரி ஜாமக்காரனில் பக்கம் 4, 3வது பாராவில் மூன்றாவது வரியில் **நகரம்** என்பதற்கு பதிலாக **நரகம்** என்று எழுதப்பட்ட அச்சுபிழையை பொறுத்துக்கொள்ளவும்.

## உங்கள் கவனத்திற்கு! உங்கள் கவனத்திற்கு!!

# On Line காணிக்கை

ஏற்கனவே நான் அறிவித்ததுபோல ஆன்லைனில் நேரிடையாக காணிக்கை அனுப்பிய பலரின் பெயர் வங்கி பாஸ்புக்கில் வருவதில்லை, சில வங்கிகளில் மட்டும் அனுப்பியவரின் பெயர் காணப்படுகிறது. ஆனால் அவர்களின் விலாசம் அறியாததால் ரசீது அனுப்பவோ காணிக்கை கிடைத்த விவரத்தை பணம் அனுப்பியவர்களுக்கு தொலைபேசி வழியாக அறிவிக்கவோ முடியாத நிலை உள்ளது.

பலர் ரசீது வேண்டாம் என்று வெளிப்படையாக அறிவித்துள்ளார்கள். காணிக்கை அனுப்பியவர்கள் இமெயில் வழியாக அல்லது கடிதத்தின் வழியாக காணிக்கை அனுப்பிய உங்கள் பெயர்... எந்த வங்கிக்கு பணம் அனுப்பினீர்கள், எவ்வளவு பணம், எந்த தேதியில் அனுப்பினீர்கள் என்பதை குறிப்பிட்டு அதோடு உங்கள் மொபைல் எண்ணையும் குறிப்பிட்டால் மிகவும் உதவியாக இருக்கும்.

பணம் கிடைத்த விவரத்தை குறித்து உங்களுக்கு ரசீது அனுப்பாவிட்டாலும் தொலைபேசியிலாவது உங்களுக்கு பணம் கிடைத்த விவரத்தை அறிவிக்கமுடியும். அப்படியே உங்களை விசாரிக்கவும், உங்களுக்காக தொலைப்பேசியில் ஜெபிக்கவும் முடியுமே! நீங்கள் பாரத்துடன் அனுப்பிய காணிக்கை எனக்கு கிடைத்த விவரத்தை உங்களுக்கு அறிவிக்க முடியாமல் போனது என் மனத்திற்கு சமாதானம் இல்லாமல் போகிறது ஆகவே சிரமப்படாமல் இதற்கு உங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறேன்.

Dr.Pushparaj

---

**APRIL 2017**

# Printed Book

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.